மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 80/2022 |
| பெயர் | : | ராமசுப்பு என்ற ராமசுப்பு நாயக்கர்(PW3) |
| த/பெ. | : | போத்திநாயக்கர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of February2023

**குறுக்கு விசாரணை**

1) சீத்தாராமன் மகன் தட்சிணாமூர்த்தி என் உறவினர் என்றால் சரிதான். மேற்படி தட்சிணாமூர்த்தி குடியிருப்பது ராஜாபாளைம் தாலுகா ராமலிங்கபுரம். அவர் பிறந்தது வளர்ந்தது எல்லாம் ராமலிங்கபுரம் என்றால் சரிதான். அவர் என் மகளின் கணவர் என்றால் சரிதான்

2) என்னால் தற்போது வாசிக்க இயலுமா என்றால் கண் பார்வை சரியாக இல்லாததால் வாசிக்க இயலாது. கங்காள் பரமேஸ்வரி, கெங்கம்மாள் என்ற கெங்கேஸ்வரி ஆகியோர்கள் என் மகள்கள் என்றால் சரிதான்.

3) இவர்கள் இருவரை தவிர வேறு வாரிசு உண்டா என்றால் இருந்தார்கள் சிறுவயதில் இறந்துவிட்டனர். மேற்படி இருமகள்களுக்கும் நான் 1992ல் என்னுடைய சொத்துக்களில் சிலவற்றை எழுதி கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான்.

4) அவற்றில் சர்வே எண். 283/7 ல் 20 செண்ட் இடம் என்றால் சரிதான். தாவா சொத்தைப்பொறுத்து அந்த காலகட்டத்தில் நான் என் மகளுக்கு எதுவும் எழுதிகொடுக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் அந்த காலகட்டத்தில் தாவா சொத்திற்கு பட்டா அனந்தப்பன் பெயரில் இருந்தது என்றால் இல்லை. யாருடைய பெயரில் இருந்தது என்றால் என்னுடைய பெயரில் இருந்தது.

5) யு.டி.ஆர் பட்டாவினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த ஆவணம் கிடைக்கப்பெறவில்லை. தாவா சொத்தின் சர்வே எண். 283/3 எ என்றால் சரிதான் .

6) தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் என் அம்மா பெயரில் இருந்தது என் பெயரில் பட்டா பாத்தியப்பட்டு இருந்தது. என் அம்மாவிற்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் எங்கள் வீட்டில் வேலை செய்யும் ஒருவருக்கு நாங்கள் பணம் கொடுத்திருந்தோம், அவரால் பணம் திரும்பி தர இயலாததால் சொ்த்தினை எழுதி கொடுத்தார்.

7) மேற்படி நபரின் பெயர் செல்லையா என்றால் சரிதான். செல்லையாவின் மறுபெயர் அனந்தப்பன் என்றால் இல்லை. செல்லையாவிடம் இருந்த என் தாயார் கிரையம் பெற்றதற்கு நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் , ஆவணங்கள் கிடைக்காததால் தாக்கல் செய்யயப்படவில்லை.

8) வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில் இல்லை. கணிணி பட்ட எண். 126 என் பெயரிலோ என் தாயார் பெயரிலோ இல்லை என்றால் சரிதான்.

9) கணிணி பட்டா எப்போது எனக்கு கிடைத்தது என்றால் எனக்கு நினைவில் இல்லை. பிரதிவாதியின் அண்ணன் பெயர் ஜெயபாண்டி என்றால் சரிதான். மேற்படி ஜெயபாண்டியின் மீது நானும் என் மனைவியும் 2009ம் வருடம் கடம்பூர் காவல் நியைத்தில் புகார் கொடுத்திருந்தோம் என்றால் சரிதான்.

10) மேற்படி வழக்கில் நானும் என் மனைவியும் சாட்சி சொன்னோம் என்றாலும் அதில் ஜெயபாண்டி விடுதலை ஆனார் என்றாலும் சரிதான், சாட்சிகளை மிரட்டிவிட்டார்கள்.

11) தாவா சொத்தைப் பொறுத்துதான் அந்த பிரச்சனையும் ஏற்ப்பட்டது என்றால் இல்லை மொத்த சொத்தைப்பொறுத்து ஏற்பட்டது. தாவல சொத்தைப்பொறுத்து நான் பயிர் காப்பீடு எதுவும் பெறவில்லை என்றால் நான் தாக்கல் செய்திருந்த காலத்தில் தரிசு நிலம் தரமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். தற்போது பிரதிவாதி சந்திரன் காப்பீடு பெற்றுள்ளார்.

12) பிரதிவாதி தற்போது அதில் பருத்தி பயிர் செய்துள்ளார் என்றால் சரிதான், மேற்படி சொத்தின் அருகில் என்னால் செல்ல இயலவில்லை, சொத்தின் அருகில் சென்றாலே வெட்டுவேன், குத்துவேன் என்று மிரட்டுகின்றனர்.

13) என் மனைவி இந்த வழக்கினை பிரதிவாதியோ அவரது வகையாட்களோ இடைஞ்சல் செய்யக்கூடாது என்று மட்டும்தான் கேட்டுள்ளார் என்றாலும் சொத்தினை திரும்ப கோரியோ தங்களுடைய சொத்து என்று விளம்புகை செய்யக்கோரியோ கேட்கவில்லை என்றால் பிரதிவாதி அப்புறப்படுத்த சொல்லிதான் கேட்டுள்ளேன்.

14) 2009ம் வருடம் ஜெயபாண்டி மீது கிரிமினல் வழக்கு கொடுத்தபோது சிவில் வழக்கு தாக்கல்செய்ய எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான், அப்போது இந்த பிரச்சனை இல்லை.

15) 2014 ம் வருடம் பிரதிவாதி தூத்துக்குடி நில அபகரிப்பு பிரிவில் என் மீது புகார் கொடுத்திருந்தார் என்றால் கொடுத்திருந்தார் .அதில் என்னையும் என் தாயாரையும் விசாரித்தார்களா என்றால் , நாங்கள் சென்றிருந்தோம் ஆனால் விசாரிக்காமல் அனுப்பிவிட்டார்கள்.

16) அதன் பின்னர் தான் 2015ம் வருடம் என் மனைவிக்கு தாவா சொத்தை எழுதிக்கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான், அவரது நகைகளை நான் வாங்கி விற்றதாலும் தொடர்ந்து வழக்காக வருவதாலும அவர்பெயரில் எழுதிக்கொடுத்தேன்.

17) என் பெயரில் எந்த ஆவணமும் கிடையாது என்றாலும் தாவா சொத்தினை பொறுத்து ஆவணம் உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்காகத்தான் நான் என் மனைவிக்கு சொத்தினை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல.

18) தாவா சொத்தில் என் தாயருக்கு உரிமை உள்ளது என்பதை காட்டுவதற்கு பட்டாவோ, வரி ரசீதுகளோ தாக்கல் செய்யவில்லை என்றால் நினைவில் இல்லை.

19) தாவா சொத்தின் மேற்கில் பால்ராஜ் நாயக்கர் புஞ்சை என்றாலும், கிழக்கில் கந்தசாமி மற்றும் முனியம்மாளின் புஞ்சை என்றாலும் சரிதான். யு.டி.ஆர் காலத்தில் இருந்தே தாவா சொத்து பிரதிவாதியின் தந்தை அனந்தப்பன் என்ற செல்லையாவின் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல.

20) பிரச்சனையை பொறுத்து உள்ளூர் காரர்களுக்கு விபரம் தெரியும் என்றாலும் அவர்களை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றாலும் சரிதான். அவர்களின் யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

21) பிரதிவாதியின் தகப்பானரிடம் இருந்து நான் 20 சென்ட் இடத்தினை கிரையம் பெற்றுவிட்டு அதனுடன் சேர்த்து தாவா சொத்தையும் அபகரிக்க முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சட்டத்திற்கு புறம்பாக பிரதிவாதியின் தந்தையின் பெயரில் இருந்த பட்டாவினை எனது பெயரில் மாற்றிக்கொண்டேன் என்றால் சரியல்ல.

22) பட்டாவினை நான் எனது பெயருக்கு மாற்றுவதற்கு முன்பாக அது பிரதிவாதியின் தந்தையின் பெயரில் தான் இருந்தது என்றாலும் நான் முறையாக அவரின் வாரிசுகளுக்கு அறிவிப்பு கொடுக்காமல் எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல.

23) பிரதிவாதிக்கு தாவா சொத்து பூர்வீக சொத்து என்றாலும் அவரது தந்தை உயில் மூலமாக தாவா சொத்தினை பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

24) தாவா சொத்தினை பிரதிவாதிதான் இன்றைய தேதிவரை அனுபவித்து வருகிறார் என்றாலும் பிரதிவாதிக்கு படிப்பறிவு இல்லாததால் நான் வருவாய் ஆவணங்கள் அனைத்தையும் என் மனைவியின் பெயரில் மாற்றிக்கொண்டேன் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யயப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**<u>வாதிதரப்பில் மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.